GST

பதிவு பெற்றோர் /பொது மக்கள் கவனத்திற்கு!

# "போலி விலைப்பட்டியல்"-க்கு

## எதிராகப் பிரச்சாரம்

"போலி விலைப்பட்டியல்" (fake invoice) என்றால் என்ன?

செய்தித் தாள்களிலும் தொலைக்காட்சி உள்ளிட்ட சமூகத் தொடர்பு ஊடகங்களிலும் "போலி விலைப்பட்டியல்" என்று குறிப்பிடப்படுவது ஜி.எஸ்.டி சட்டத்திற்குப் புறம்பான போலியான விலைப்பட்டியல்.

ஜி.எஸ்.டி சட்டம் மற்றும் விதிகளைப் பின்பற்றி வழங்கப்படாத "விலைப்பட்டியல்" போலி விலைப்பட்டியலாகும். பொதுவாக, "போலி விலைப்பட்டியல்களை" இரண்டாக வகைப்படுத்தலாம்:
i) எந்த ஜி.எஸ்.டி வழங்கலும் (GST supply) இல்லாத விலைப்பட்டியல்;
ii) ஜி.எஸ்.டி சட்டத்திற்குப் புறம்பான வழங்கலுடன் கூடிய விலைப்பட்டியல்.

"போலி விலைப்பட்டியல்களின்" விளைவுகள் என்ன?

சில வணிகம், வர்த்தகம் மற்றும் தொழில் நிறுவனங்கள், ஜி.எஸ்.டி சட்டத்திற்கு விரோதமாக உள்ளீட்டு வரி வரவைப் (Input Tax Credit) பெறுவதற்காகவும் வழங்குவதற்காகவும் போலி விலைப்பட்டியல்களைப் பயன்படுத்துகின்றன. இது ஜி.எஸ்.டி சட்டத்தின் கீழ் கடும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

போலி விலைப்பட்டியல்களின் சமூக விளைவுகள் யாவை?

போலி விலைப்பட்டியல்களைத் தயாரித்து விற்பனை செய்வதும் அல்லது அவற்றின் மூலமாகச் சட்டவிரோதமான உள்ளீட்டு வரி வரவைப் பெற முயற்சிப்பதும் சட்டவிரோதச் செயல் மட்டுமல்ல, மாபெரும் சமூகக் குற்றமாகும். இவ்வகைக் குற்றம்
i) ஜி.எஸ்.டி மூலம் அரசுக்குச் சேர வேண்டிய வருவாயைப் பாதிக்கிறது, எனவே நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எதிரானது;
ii) இவ்வகைக் குற்றத்தின் மூலம் தனிநபரும் நிறுவனங்களும் ஈட்டும் பண வடிவிலான வருவாய், பல சமூகவிரோதச் செயல்களைச் செய்வதற்கும் சமூகப் பதட்டத்தைத் தூண்டவும் பயன்படுத்தப்படுகின்றது.

ஜி.எஸ்.டி சட்டத்திற்கு விரோதமாகப் ''போலி விலைப்பட்டியல்'' தயாரிப்போரும் பயன்படுத்துவோரும் எவ்வாறு தண்டிக்கப்படுகிறார்கள்?

ஜி.எஸ்.டி சட்டத்திற்கு விரோதமாகப் ''போலி விலைப்பட்டியல்'' தயாரிப்பதும் பயன்படுத்துவதும் கடுமையான பொருளாதார மற்றும் சமூகக் குற்றமாகும். எனவே இத்தகைய கொடுஞ்செயல்களைச் செய்வோரிடமிருந்து, சட்டவிரோதமாகப் பெறப்பட்ட உள்ளீட்டு வரி வரவு வட்டியுடன் வசூலிக்கப்படும். அபாரதமும் விதிக்கப்படும். விசாரணையின் அடிப்படையில் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் வழங்கப்படும்.

ஜி.எஸ்.டி சட்டத்திற்குப் புறம்பான "போலி விலைப்பட்டியல்" என்னும் பாதகச் செயலைத் தடுப்பதில் பொதுமக்களின் பங்கு என்ன?

"போலி விலைப்பட்டியல்" தயாரிப்போரையும் பயன்படுத்துவோரையும் பற்றி ஏதேனும் தகவல் கிடைத்தால் உடனே ஜி.எஸ்.டி சேவை மையத்திற்கு தொலைபேசி மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ தெரிவிக்கலாம். தகவல் தருவோரின் அடையாளம் இரகசியமாகக் காக்கப்படுகிறது. CBIC - இன் நெறிகளுக்கு உட்பட்டு, தகவல் தெரிவிப்போருக்கு வெகுமதியும் வழங்கப்படலாம்.




“போலி விலைப்பட்டியல்” குறித்து, பொது மக்கள், ஜி.எஸ்.டி பதிவு பெற்றோர் மற்றும் வரி செலுத்துவோருக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, இக்கையடக்கப்பதிப்பு, பொதுநலன் நோக்கில் வெளியிடப்படுகிறது.

ஜி.எஸ்.டி மற்றும் மத்திய கலால் ஆணையாளர் அலுவலகம், சென்னைப் புறநகர்.
நியூரி டவர்ஸ், எண் 2054-1, 2 வது நிழல் சாலை, 12 வது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை - 600040.
தொலைபேசி - 04426142850, 52 மின்னஞ்சல்-Sevakendra-outer-tn@gov. in
ட்விட்டர் @gstchennaiouter

ஜி.எஸ்.டி உதவி மையம்
சென்னைப் புறநகர்.